


- வாழ்வோம்


வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

Surya Born To Win



We Dravidians



மல்லிகை மணாளன் (தமிழ்க் குடும்பம்)

நாஞ் சொல்லல! மோடி, இந்தியாவின் விஜய்! விஜய், தமிழ்நாட்டின் மோடி! கதை, வசனம், தயாரிப்பு, டைரக்ஷன் அமித் ஷா! உதவி டைரக்டர் இன்கம் டேக்ஸ், ED, CBI!

`தமிழ்நாட்டின் பல அரசுப் பள்ளிகளில், மதிய உணவுடன் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய முட்டைகள் வழங்கப்படவில்லை' என்கிற தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஈரோடு, சேலம், திருநெல்வேலி, நாகப்பட்டினம், திருச்சி, கரூர் உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு முட்டை விநியோகம் செய்யப்பட வில்லை. `நாமக்கல் மாவட்டத்தில் இருக்கும் பள்ளி களுக்குக்கூட, முட்டை அனுப்பப்படவில்லை' என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக, அகிலன் கார்த்திகேயன் என்பவர் எழுதியுள்ள விமர்சனப் பதிவில்...

``மேற்கு வங்க மாநிலத்தில், பா.ஜ.க.வின் சுவேந்து அதிகாரி முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, அங்குள்ள அரசு, சில அரசுப் பள்ளிகளில் மதிய உணவில் முட்டை வழங்குவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, சைவ உணவுகள் வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு அவர்கள் சொன்ன காரணம், `இஸ்கான்' அன்னமித்ரா அறக்கட்டளை'க்கு உணவு தயாரிக்கும் அனுமதி கொடுக்கப்படு கிறதாம். அவர்கள் அசைவ உணவைத் தயாரிக்க மாட்டார்களாம்.

தமிழ்நாட்டில், பா.ஜ.க. திட்டங்கள்!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்க `அக்ஷய பாத்திரா' அமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, மையப்படுத்தப்பட்ட சமையலறைகளும் அமைக்கப்பட்டன. வெங்காயம், பூண்டு இல்லாத சாத்வீக முறையில் உணவு தயாரிக்கப்பட இருந்தது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, திட்டம் கைவிடப்பட்டது. அக்ஷய பாத்திராவும், இஸ்கானுக்குக் கீழ் இயங்கும் அறக்கட்டளைதான்.

இதில் இன்னொரு முக்கியமான செய்தி, தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் கீழ் இயங்கும் ஒரு வல்லுநர் குழு, கடந்த 2022- இல், `பள்ளிகளில் வழங்கும் மதிய உணவில் முட்டைகளோ, இறைச்சியோ இருக்கக் கூடாது' என்று பரிந்துரைக்கும் வகையில், தனது `POSITION PAPER'-ஐ வெளியிட்டிருந்தது. மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. ஆட்சி அமையும்வரை இது நடந்ததில்லை. தமிழ்நாட்டில், இன்று பாஜக. மறைமுக ஆட்சியில் நடைமுறைப்படுத்த உள்ளனர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ப்ளாஷ்பேக்



நா.வேதகிரி

கல்லூரியில் தலைவர் உரை!

1992-ஆம் ஆண்டு, மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரியின் ஆண்டு விழாவில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு, மாணவ மாணவியர் மத்தியில் எழுச்சிமிக்க உரையாற்றினார். அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்கள், இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். மேடவாக்கம் ஊராட்சியின் கழகச் செயலாளராக இருந்த நான், தலைவரை வரவேற்றுப் பொன்னாடை அணிவித்து, மரியாதைசெய்தேன். மேடையில், தலைவருடன் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அண்ணன் மீ.அ.வைத்தியலிங்கம் அருகில் உள்ளார்.

- நா.வேதகிரி,
மேடவாக்கம் கிளைக் கழகச் செயலாளர்,
மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர், செங்கல்பட்டு மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com



தெரிந்து கொள்வோம்

1957 33 வயதில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் ஆனார் கலைஞர்.

1965 தனுஷ்கோடி புயல் பாதிப்பு- கழகத்தின் சார்பில் ரூ. 3,000 நிதி உதவி.

1965 கலைஞர் கைது. பாளையங்கோட்டைச் சிறையில் 62 நாட்கள் சிறைவாசம்.

1966 தி.மு.க. 4-வது மாநாடு, சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்றது.

1967 தென்சென்னை நாடாளுமன்ற இடைத்தேர்தலில், `முரசொலி' மாறன் வெற்றி.

1972 தேனாம்பேட்டையில் அண்ணா அறிவாலயம் கட்ட இடம் வாங்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900